**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ஆம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் பங்குனித் திங்கள் 20 ம் நாள்

E.P.No.01/2025

in

ARC.No. 286/2017

ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு (பி) லிமிடெட்,
அதற்காக சீட்டு முன்பன்,
42, கோபால சமுத்திரம் கீழவீதி,
S.T. காம்ப்ளக்ஸ், இந்தியன் வங்கி முதல்தளம்,
மன்னார்குடி. ..... மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர்

**// எதிர்//**

1. V. நித்தியா
2. R.கலா
3. P. அனுராதா
4. M.தமிழ்செல்வி
5. S.நந்தகுமார் ..... எதிர்மனுதாரர்கள்/ தீர்ப்பு கடனாளிகள்

இம்மனுவானது என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. பொன்னுலிங்கம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்களுக்கு நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், அழைக்கப்பட்டும் வருகையில்லாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டு, மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள் வரை என் பரிசீலினையில் இருந்து இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

E.P.No.01/2025 03.04.2025

## உத்தரவு

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஜங்கம சொத்து ஜாபிதாவில் கண்டுள்ள சொத்துக்களை ஜப்தி செய்து ஏல இஸ்தியார் வகையறாவை ஏற்று சொத்துக்களை ஏலம் போட்டு தொகைகளை வசூல் செய்து அடைந்து கொள்ள உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 11-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவில் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களுக்கு சி.பி.சி.ஆர்டர் 21 ரூல் 37 ன்படி நோட்டீஸ் விட்டு கேட்டும், அதன்படி நோட்டீஸை பெற்றுக்கொண்டு 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தொகை ஏதும் செலுத்தி வைக்காத பட்சத்தில் சொத்து விபர ஜாப்தாவில் கண்டுள்ள ஜங்கம சொத்துக்களை ஜப்தி செய்து அவைகளுக்கு மதிப்பு ஏற்படுத்தி பின்னர் மனுதாரரால் தாக்கல் செய்யப்படும் ஏல இஸ்தியார் வகையறாவை ஏற்று சொத்துக்களை ஏலம் போட்டு தொகைகளை வசூல் செய்து அடைந்துகொள்ள உத்தரவு பிறப்பிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்களுக்கு நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், அழைக்கப்பட்டும் வருகையில்லாததால் இம்மனுவினைப் பொறுத்து ஒருதலைப்பட்ச மாக்கப்பட்டுள்ளனர்.

**4) இம்மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

5) <u>**தீர்வு**</u> :--

1. மனுதாரர் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

2. மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

3. மனுவினை பரிசீலிக்கும் போது நிறைவேற்று மனுவினை பரிசீலிக்கும் போது, மனுதாரர் தரப்பில் வழக்கில் கடந்த 30.01.2018 ம் தேதியன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்படி மனுதாரர் தரப்பில் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்து நாளது தேதிவரை மேல் முறையீடு ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை அறிய முடிகிறது. மனுதாரர் தரப்பு வாதம் மற்றும் வழக்காவணங்கள் அடிப்படையில் எதிர்மனுதாரர்கள் தீர்ப்பாணை நிறைவேற்றப்படவில்லை. மேலும், அசல் வழக்கில் தீர்ப்பாணையை எதிர்த்து எவ்வித மேல் முறையீடும் செய்யவில்லை என்பதை இந்த நீதிமன்றம் கவனமாக கருத்திற்கொள்கிறது. எனவே, மேற்கண்ட காரணங்களை பொறுத்து இந்த மனுவினை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

6) **முடிவில், மனுவில் கண்டுள்ள ஜங்கம ஜாபிதாவில் கண்டுள்ள ஜங்கம சொத்துக்களை ஜப்தி செய்து** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. படி செலுத்த ஒரு வாரம்.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்து-தட்டச்சரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (03.04.2025) அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

**இருதரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ஆம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் பங்குனித் திங்கள் 20 ம் நாள்

E.P.No.01/2025

in

ARC.No. 286/2017

மன்னார்குடி டி.மு. இலாகா மற்றும் தாலுக்கா, கஸ்பா மன்னார்குடி, 42, கோபால சமுத்திரம் கீழவீதி, S.T. காம்ப்ளக்ஸ், இந்தியன் வங்கி முதல்தளம் என்ற முகவரியில் இயங்கி வரும் ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு (பி) லிமிடெட், அதற்காக சீட்டு முன்பன்,

..... மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர்

// எதிர் //

1. திருமதி. நித்தியா, வயது 46, க/பெ. தெரியவில்லை, இந்து, வசிப்பிடம் கதவு எண்.1/108, வடக்கு தெரு, பரவாக்கோட்டை, மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா.

2. திருமதி.கலா, வயது 44, க/பெ. ராஜேந்திரன், இந்து, வசிப்பிடம் கதவு எண்.1/108, வடக்கு தெரு, பரவாக்கோட்டை, மன்னார்குடி டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா.

3. திருமதி. அனுராதா, வயது 47, க/பெ.பண்டேரிநாதன், இந்து, வசிப்பிடம் கதவு எண்.1/29, கவரைத்தெரு, வடகண்டம், திருக்கணமங்கை கிராமம், குடவாசல் டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா.

4. திருமதி. தமிழ்ச்செல்வி, வயது 45, க/பெ.முத்துகுமார், இந்து, வசிப்பிடம் வண்மீகப்புரம், காமராஜ் தெரு, தஞ்சைசாலை, திருவாரூர், திருவாரூர் டி.மு. இலாகா மற்றும் தாலுக்கா.

5. திரு. நந்தகுமார், வயது 42, த/பெ.சுப்பிரமணியன், இந்து, வசிப்பிடம் கதவு எண்.12 இ, களுவமுள்ளித்தெரு, திருத்துறைப்பூண்டி, திருத்துறைப்பூண்டி டி.மு. இலாகா மற்றும் தாலுக்கா.

..... எதிர்மனுதாரர்கள் / தீர்ப்பு கடனாளிகள்

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஜங்கம சொத்து ஜாபிதாவில் கண்டுள்ள சொத்துக்களை ஜப்தி செய்து ஏல இஸ்தியார் வகையறாவை ஏற்று

சொத்துக்களை ஏலம் போட்டு தொகைகளை வசூல் செய்து அடைந்து கொள்ள உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 11-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 21.01.2025

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 21.01.2025

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனுவானது என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. பொன்னுலிங்கம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்களுக்கு நீதிமன்றத்தின் மூலம் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், அழைக்கப்பட்டும் வருகையில்லாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டு, மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள் வரை என் பரிசீலினையில் இருந்து இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. **மனுவில் கண்டுள்ள ஜங்கம ஜாபிதாவில் கண்டுள்ள ஜங்கம சொத்துக்களை ஜப்தி செய்து** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
02. படி செலுத்த ஒரு வாரம்.

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.